Manjalar Scheme

* 1414 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா மஞ்சளாறு திட்டம் இந்த ஆண்டு வேலை துவங்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : The matter is under consideration of the Government.

Hospital for Orathanad

* 1415 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is a proposal to construct a hospital at Orathanad, Thanjavur district, by improving the dispensary at the place;

(*b*) if so, at what cost and with what bed strength; and

(*c*) when will the work be taken up?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

SRI R. SRINIVASA IYER : ஒரத்தநாடு ஆஸ்பத்திரி லோகல் பண்டு டிஸ்பென்சரியாக இருந்தது தாலூகா தலைநகர ஆஸ்பத்திரியாக ஆகியிருக்கிறது. அதை கவர்ன்மெண்டு எடுத்துக்கொண்டாகி விட்டது. 3 வருஷத்திற்கு முன்னால் அதை 50 பெட்கள் உள்ள ஆஸ்பத்திரியாக விஸ்தரிக்கவேண்டுமென்ற ஒரு "ப்ரபோஸல்" இருந்தது. "இல்லை" என்று இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்களே ? ஒரத்தநாடு ஆஸ்பத்திரியை ஜாஸ்தி விஸ்தரிப்பதற்கு திட்டமே கிடையாதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கேள்விக்குத் தகுந்த பதில் சொல்லி விட்டேன். இது தாலூகா தலைமை நகர ஆஸ்பத்திரி ஆனதினாலே எல்லா தாலூகா தலை நகர ஆஸ்பத்திரிகளையும் விஸ்தரித்து ஜில்லா ஆஸ்பத்திரி அளவுக்குக் கொண்டு வருவதாக உத்தேசம். இதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் கவனிக்கப்பட்டு வருகிறது.

Electricity workers—Demands

* 1418 *Q.*—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the electricity workers of the Tamilnad Electricity Workers' Federation has issued notice to the Electricity Board that the electricity workers will make a token strike on 13th February 1961 throughout the State; and

(*b*) the demands of the electricity workers?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The date mentioned in strike notice was 8th February 1961 and not 13th February 1961.

26th August 1961]

(*b*) (i) withdrawal of notice issued by the Madras State Electricity Board under section 9 (*a*) of the Industrial Dispute Act proposing a reduction in the number of days of casual leave and National Festival holidays; and

(ii) enhancement of Dearness Allowance.

SRI K. VINAYAKAM : Did the strike fructify? If not, what was the reason for the non-fructifying of the contemplated strike? Were the demands met reasonably at least?

THE HON. SRI R. VENKATARAMAN : The strike did not fructify. I think better counsels prevailed. That is why the strike did not take place.

SRI K. VINAYAKAM : May I know whether the demands for increase of salaries, etc., were met reasonably at least?

THE HON. SRI R. VENKATARAMAN : So far as dearness allowance is concerned, it is covered by agreement between the State Electricity Board and the workers. During the currency of the settlement, no claim can be made for increase. Government declined, therefore, to refer the matter for adjudication. So far as question of revising number of holidays is concerned, the matter is before the High Court.

SRI S. M. ANNAMALAI : இந்த மின்சாரத் தொழிலாளர்களுக்கு சம்பளக் கமிஷன் சிபார்சுப்படியும் சம்பளம் தரப்படவில்லை. இவர்களுக்கான "ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ்" "ப்ரேம்" செய்யவில்லை என்று சொல்லப்படுகிறது. காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு இருந்தால்கூட, சர்க்கார் எந்த அடிப்படையிலே ஒத்துக்கொள்ளுகிறார்கள் என்பதையாகிலும் "கவுண்டர் பெடிஷனில்" சொல்லக்கூடாதா. "கவுண்டர் பெடிஷன்" போடாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அதனால் பல குறைபாடுகள் மின்சார தொழிலாளர்களிடையே காணப்படுகின்றன. இதைப் போக்குவதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : மின்சாரத் தொழிலில் 18 யூனியன் இருக்கிறது. ஒருவர் சொன்னபடி ஒருவர் ஒத்துக்கொள்ளுவதில்லை. சர்க்காரைப் பொருத்த அளவிலே "சர்க்கார் ஊழியர்களுக்கு கொடுக்கிற சம்பள விகிதம் கொடுக்கிறோம். சர்க்கார் ஊழியர்களுக்கு லீவு வசதி குறைக்கப்பட்டிருக்கிறது. அதை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னோம். ஆனால், அவர்களுக்கு லீவு வசதிகளை குறைக்கக்கூடாது, சம்பளத்தை மாத்திரம் சர்க்கார் கொடுக்கிற அளவிற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். இது ஒரு யூனியன் கருத்து. மற்றொரு யூனியன் "நாங்கள் லீவு வசதிகளை குறைத்துக்கொள்ளுகிறோம், சர்க்கார் கொடுக்கிற ஊதியம் முதலியவற்றை எங்களுக்கு கொடுக்கவேண்டும். அதுவும் முக்கியமாக "லிபரலைஸ்டு பென்ஷன் ரூல்ஸ்" ஸ்டாபுக்கு அதிகமாக சாதகமாக இருக்கிறது. அவைகளையெல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கஷ்டம் என்னவென்றால், உயர்நீதி மன்றத்தில் ரிட் பெடிஷன் இருக்கும்பொழுது, சர்க்கார் எந்த விதமான ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. அப்படிச்செய்தால் உயர்நீதி மன்றரிட்டில் என்ன ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறதோ, அதை சர்க்கார் முன்கூட்டியே முடிவு செய்ததுபோல் ஆகிவிடும். உதாரணமாக இப்பொழுது மின்சார போர்டுக்கும், தொழிலாளர்களுக்கும் ஹைகோர்ட்டில் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை என்னவென்று சொன்னால், அவர்களுக்கு "இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்" அமுல் ஆகுமா, ஆகாதா

என்பது. மின்சார போர்டினுடைய வாதம் அவர்களுக்கு தனியாக "ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ்" இருக்கிறது, அதனால் அவர்களுக்கு "இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்" அமுலாகாது என்பது. தொழிலாளர்கள் வாதம் அவர்களுக்கு "ஷாப்ஸ் ஆக்ட்" அமுல் ஆகும், "இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்" அமுலாகும் என்பது. உயர்நீதி மன்றம் தான் இதில் தீர்ப்பு செய்யவேண்டுமே தவிர, நாங்கள் எப்படி தீர்ப்பு செய்வது? தொழிலாளர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தால், அதில் சர்க்கார் லேபர் டிபார்ட்மெண்டு முன்நின்று தீர்த்து வைப்பதற்கு தயாராக இருக்கிறது. ஆகவேதான், அவர்கள் லீவு வசதிகளை சர்க்கார் ஊழியர்களுக்கு கிடைக்கும்படியான அளவுக்கு குறைத்துக் கொண்டால் அவர்களுக்கு சம்பளவிகித வசதிகளை சர்க்கார் தலையிட்டு ஆவன செய்வதற்கு தயாராக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், தொழில் இலாகா சொல்லக் கூடிய தீர்ப்புகளை, மின்சார இலாகா அமுல் படுத்துவதில்லை என்பது உண்மையா? அப்படி யானால், தொழில் இலாகாவுக்கும், மின்சார இலாகாவுக்கும் முரண்பாடு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? அதைத் தீர்க்க என்ன நடவடிக்கை சர்க்கார் எடுக்கப் போகிறார்கள்?

The Hon. Sri R. VENKATARAMAN : தொழில் இலாகா யோசனையை போர்டார் ஏற்றுக்கொள்ளவில்லை; கன்சிலியேஷன் முடிந்த பிறகு மந்திரியிடம் சொன்னார்கள். அதன் பேரில், இரண்டு தரப்பினரையும் கூட்டி, மந்திரி ஆலோசனை கூறினார்கள். அந்த ஆலோசனை தப்பு என்று இப்பொழுது ஹைகோர்ட்டில் ரிட் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஹைகோர்ட்டில்தான் நம்பிக்கையும், பிரியமும் இருக்கிறதெனத் தெரிகிறது. ஹைகோர்ட்டு தீர்ப்பு அளிக்கும் வரை ஒன்றும் செய்வதற்கில்லை.

Sri J. MATHA GOWDER : மின்சார இலாகாவை அத்தியாவசிய சர்வீஸ் என்றும் அங்கு ஸ்டிரைக் செய்யக்கூடாது என்று உத்தரவோ அல்லது ஒரு சட்டமோ நிறைவேற்றச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

The Hon. Sri R. VENKATARAMAN : நான் அவசியம் என்று நினைக்கவில்லை.

Sri T. S. RAMASWAMI : May I know, Sir, whether the Government have been impleaded as a party in the writ petition in the High Court? May I know what is the attitude of the Government and may I also know whether the Industrial Disputes Act applies to the workers or not?

The Hon. Sri R. VENKATARAMAN : The Government is a party and have been impleaded as such in the writ petition. But Government are not going to take any stand on this.

Sri S. M. ANNAMALAI : அமைச்சரவர்கள் பதிலில், லீவு வசதிகளைக் குறைத்துக் கொண்டால், சர்க்கார் சம்பள விகிதங்களைக் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். 18 யூனியன்களில் மெஜாரிடித் தொழிலாளர்கள் அதை ஒத்துக் கொண்டால், அப்படி அவர்கள் லீவு வசதிகளைக் குறைத்துக் கொண்டால், சம்பளக் கமிஷன் சிபாரிசுகள்படி சம்பளம் அவர்களுக்குக் கொடுப்பார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : பதினெட்டு யூனியன்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுதாபம் பெற்ற யூனியன் ஒன்று இருக்கிறது. ஒரு யூனியன் மட்டும் சொன்னால், நாங்கள் அதை வைத்துக் கொண்டு அமுல் நடத்த முடியாது. மெஜாரிடி ஆப் தி ஒர்கர்ஸ் ஒத்துக் கொண்டால்தான் செய்ய முடியும். தனிப்பட்ட முறையில்

26th August 1961]

நான் ஆலோசனை சொன்னேன். சர்க்கார் விதிகளை விதித்திருக்கும்போது, ஒன்றை ஒத்துக் கொண்டால் எல்லாவற்றையும்தான் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று. சம்பள வசதிகள் வேண்டுமென்றால், சர்க்கார் விதி கள்படி லீவு வசதிகளையும் குறைத்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண் டும். அப்படி ஒத்துக்கொண்டால், நாங்கள் சம்பள வசதிகள் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னேன். அதற்கு முன்னால், கோர்ட் டில் இருக்கும் காரணத்தினால், தொழிலாளிகள் எந்த விதமான ஒப்பந் தத்திற்கும் ஒத்துக்கொள்ளவில்லை.

Handloom Technological Institute

* 1419 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் கைத்தறி தொழில் நுட்ப கழகங்கள் எங் கெங்கே ஆரம்பிக்கப்பட்டுள்ளன ?

(இ) இனிமேல் எங்கெங்கே ஆரம்பிக்க உத்தேசம் ?

(உ) அவைகளில் குறுகிய கால பயிற்சி கொடுக்க உத்தேசம் உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Institutes of Handloom Technology have not been started in any place by the Government. There is, however, an Institute of Handloom Technology at Salem conducted by the All-India Handloom Board from 1st July 1960.

(*b*) There are no proposals to start such institutions in the near future.

(*c*) Does not arise.

Textile mills

* 1420 *Q.*—Sri M. KALYANASUNDARAM (on behalf of Sri N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any decision has been taken regardnig nationalisation of textile mills; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Disappearance of patient (Government General Hospital, Madras)

* 1421 *Q.*—Sri S. M. ANNAMALAI : } Sri A. A. RASHEED : } Will the Hon. the Minister for Revenue be pleased to state whether a woman patient disappeared from the General Hospital on 4th April 1961?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes. Sir. The woman patient was subsequently admitted and treated in the hospital from the 5th to 11th April 1961. She was discharged cured from the hospital on 12th April 1961.

Sri A. A. RASHEED : May I know, Sir, the circumstances of her disappearance from the hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU : காயத்திற்கு சிகிச்சை செய்து கொள்ள ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். பரிசீலனை செய்து, ஆப ரேஷன் தியேட்டருக்கு அனுப்பினார்கள். அங்கே நிறைய ஆள்கள் இருந்ததால், காத்திருக்க வேண்டியிருந்தது. அதற்குள் அந்த அம்மா